# முல்/ஒலுமடு தமிழ் வித்தியாலயம்

முதலாம் தவணை

தரம்: 6 **தமிழ் மொழியும் இலக்கிய(மும்** நேரம்: 2மணி

பகுதி I

**பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1) "ஓடி வருவாயம்மா உள்ளங் கலங்குதம்மா" என்பதில் **உள்ளம்** என்பது
   1. மனம் 2. கண்கள் 3. தண்ணீர் 4. கூட்டம்

2) "மாமருதின் நீழலிலே மந்தியினம் குந்தி" என்பதில் **நீழல்** என்பதன் ஒத்தகருத்து
   1. இரவு 2. கிளை 3. மரம் 4. நிழல்

3) "நீ எழுதிய மடல் கிடைத்தது" என்பதில் **மடல்** என்பதன் **ஒத்தகருத்து**
   1. தண்டு 2. திருமுகம் 3. இலை 4. காசோலை

4) ஆத்திகன் என்பதன் எதிர்பதம்
   1. சூரியன் 2. ஆத்திகா 3. நாத்திகன் 4. கீர்த்திகன்

5) "சண்டை செய் வீரன் போல" என்பதிலுள்ள அணி யாது?
   1. உருவகம் 2. உவமை 3. தற்குறிப்பேற்றம் 4. சிலேடை

6) பின்வருவனவற்றுள் இரட்டைக்கிளவியாக வருவது
   1. முத்துப்போல 2. கலகல 3. கொஞ்சிக் குலவி 4. பெரிய பெரிய

7) தமிழிலுள்ள மெய்யெழுத்துக்களின் எண்ணிக்கை
   1. 12 2. 18 3. 216 4. 247

8) சிங்கம், வண்டு, விஷ்ணு என்பவற்றைக் குறிக்கும் ஒரு சொல்
   1. அரி 2. அறி 3. மரி 4. கறி

9) பின்வருவனவற்றுள் பெயர்த்தொடராக வருவது
   1. படித்தான் 2. பசு 3. வந்தாள் 4. சிரித்தார்கள்

10) "அழகான படம் வரைந்தேன்" என்ற வாக்கியத்தின் எழுவாய்
   1. அழகான 2. படம் 3. நான் 4. வரைந்தேன்



Agaram.lk - Keep your dreams alive!
Agaram.lk - Keep your dreams alive!
agaram.lk

11) பயனிலையோடு திணை, பால், எண், இட உறவு கொண்டுள்ள பெயர்ச்சொல் எவ்வாறு அழைக்கப்படும்?

1. பயனிலை 2. எழுவாய்

3. அடைமொழி 4. செயப்படுபொருள்

12) பெயர்ச்சொற்களை பாலடிப்படையில் எத்தனை வகைப்படுத்தலாம்?

1. 2 2. 3 3. 4 4. 5

13) பின்வருவனவற்றுள் உயர்திணை ஒருமையாக அமைவது

1. பசு மேய்ந்தது 2. கமலா பாடினாள்
3. அவர்கள் படித்தார்கள் 4. மரங்கள் மேய்ந்தன

14) கேட்போனைச் சுட்டும் பெயர் எவ்வாறு அழைக்கப்படும்

1. தன்மை 2. முன்னிலை 3. படர்க்கை 4. அஃறிணை

15) தம்பி கடைக்குப் போனான். இவ்வாக்கியம் குறிக்கும் காலம்

1. இறந்த காலம் 2. நிகழ்காலம் 3. எதிர்காலம் 4. பருவகாலம்

16) ஒரு வாக்கியத்தின் முடிவைக் காட்டும் நிறுத்தற் குறி

1. காற்புள்ளி 2. அரைப்புள்ளி 3. வினாக்குறி 4. மெய்ப்பாட்டுக்குறி

17) “அறம் செய விரும்பு” என்றார் ஔவைப்பிராட்டியார். இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள “.....” என்ற குறியீடு

1. காற்புள்ளி 2. மேற்கோற் குறி 3. வியப்புக்குறி 4. வினாக்குறி

18) ஓர் எழுவாயும் ஒரு பயனிலையும் கொண்ட வாக்கியம்

1. கூட்டு வாக்கியம் 2. கலப்பு வாக்கியம் 3. வினா வாக்கியம் 4. தனி வாக்கியம்

19) தங்கம் விதைத்தால் தங்கம் விளையுமா? என்ற கதையை எழுதியவர்

1. தங்கத் தாத்தா 2. சோதி 3. கணேசலிங்கன் 4. தமிழ்ச்செல்வன்

20) பின்வருவனவற்றில் கடிதத்தினை உறுப்பாக அமைவது

1. முகவரி 2. முகவுரை 3. முடிவுரை 4. தொடருரை

(20 x 1 = 20 புள்ளிகள்)

Agaram.lk - Keep your dreams alive!
Agaram.lk - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

தரம்: 6 **தமிழ் மொழியும் இலக்கியமும்** **நேரம் : 2 மணி**

பகுதி II

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01) வகுப்பறையில் நீர் மேற்கொண்ட பேச்சுக் கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு விடை தருக.

(1) அது எத்தலைப்பில் மேற்கொள்ளப்பட்டது?

(2) இக்கணிப்பீட்டுக்கு தகவல்களை எவ்வாறு பெற்றுக் கொண்டீர்?

(3) இக் கணிப்பீட்டிற்காக நீர் செய்த ஆயத்தங்கள் 02 தருக.

(4) ஆசிரியர் கூறிய அறிவுரைகள் 02 தருக.

(5) இக் கணிப்பீட்டினை மேற்கொள்ள நீரடைந்த இடர்கள் எவை?

(6) இக் கணிப்பீட்டினால் நீர் பெற்றுக் கொண்ட நன்மைகள் எவை?

(16 புள்ளிகள்)

02) பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களில் அமையுமாறு கட்டுரை வரைக.

1. நான் விரும்பும் பெரியார்
2. சாலை விதிகளை மதிப்போம்
3. சூழலை பேணுவோம்
4. உடைந்த கைத்தொலைபேசியின் சுயசரிதை

(17 புள்ளிகள்)

03) உமது பாடசாலையில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டி பற்றி உமது நண்பனுக்கு / நண்பிக்கு 50 சொற்களில் அமையுமாறு கட்டுரை வரைக.

(10 புள்ளிகள்)

04) எவையேனும் விரும்பிய ஆறு வினாக்களுக்கு விடை தருக.

1. ஈ.்.பண்டியின் நற்பண்புகள் எவை?
2. அலை என்ற சொல்லை பெயராகவும் வினையாகவும் வர வாக்கியத்தில் அமைக்குக.
3. காக்கையிடம் காணப்பட்ட தீய பழக்கம் எது?
4. சரிவிகித உணவு என்றால் என்ன?
5. மேவாஸ் பறவை வாழ்ந்த இடம் எது?
6. தனி வாக்கியத்திற்கு இரு உதாரணங்கள் தருக.
7. பறவைகள் பலவிதம் என்ற நாடகத்தை எழுதியவர்?
8. தினை எத்தனை வகைப்படும்? அவை எவை?

(12 புள்ளிகள்)



agaram.lk

Agaram.lk - Keep your dreams alive!

Agaram.lk - Keep your dreams alive!

05) பின்வரும் தொடர்களைப் பயன்படுத்தி பூரணமான வாக்கியம் அமைக்குக.

1. மூலைமுடுக்கு
2. கரிய கரிய
3. பால் போன்ற நிலவு
4. சீரும் சிறப்பும்
5. உயர்வு தாழ்வு

(05 புள்ளிகள்)

Agaram.lk - Keep your dreams alive!
Agaram.lk - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk